**அசல் வழக்கு எண்.20/2019**

**தேதி: 24.1.2023.**

**வா.சா.1 ( திருமதி.பிரியா.)**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆசிரியர் தொழிற் பயிற்சி மற்றும் பட்டப் படிப்பு படித்துள்ளேன். தற்போது என்னுடைய வயது 34. என்னுடைய தாத்தாவின் பெயர் ரங்கநாதன். என் தாத்தா ரங்கநாதனுக்கு என் தந்தை நித்தியானந்தம், குலசேகரன், கண்ணபிரான், அசோக்குமார் ஆகிய ஆண் வாரிசுகளும், சாந்தி மற்றும் வசந்தி ஆகிய பெண் வாரிசுகளும் உள்ளனர் என்றால் சரி தான்.

வழக்கில் பி செட்டியுலில் சொல்லப்பட்டுள்ள வீட்டு மனையுடன் அதிகப்படியான பரப்பளவில் சொத்தானது என் தாத்தா ரங்கநாதனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி தான். என் தாத்தா பி செட்டியுலில் கண்டுள்ள வீட்டு மனையை 22.11.1973 தேதியில் தான செட்டில்மெண்ட் முன்னிலைக்கு என் தந்தை மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு கொடுத்துள்ளார் என்றால் சரி தான். அதன்பின்னிட்டு என் அப்பா மற்றும் அவருடைய சகோதரர்கள் உடன் தான செட்டியுல் முன்னிலைக்கு கிடைத்த சொத்துக்களை பொறுத்து 19.5.1986ல் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் சரி தான்.

அந்த பாகப்பிரிவினை அடிப்படையில் தாவா பி அட்டவனை சொத்தானது என் தந்தைக்கு பாகமாக வந்தது என்றால் சரி தான். என் தாத்தா ஒட்டுனர் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. தரகு வேலை செய்து வந்தார். என் தாத்தா தரகு வேலை செய்து வந்தார் என்பதை குறித்து என்னுடைய பிராதிலும், பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லையென்றால் சரி தான்.

என் தந்தைக்கு மாடு வாங்கி விற்பனை செய்யும் வேலை என்றால்

அதை வியாபாரமாக செய்யாமல் தெரிந்தவர்களுக்கு மட்டும் செய்துக்கொடுப்பார். என் தந்தை கறவை மாடு வாங்கி விற்பனை செய்யும் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

என் தந்தைக்கு என்ன தொழில் என்றால் மனை வாங்கி மனை பிரிவுகள் செய்து விற்பனை செய்வது தான். மேற்படி தொழிலை கடந்த 10 ஆண்டுகளாக செய்து வருகிறார். என் தந்தைக்கு இந்த தொழில் தான் என்பது குறித்து என்னுடைய பிராதிலும், பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லையென்றால் சரி தான். பி அட்டவனை சொத்தை பொறுத்து எந்த வருமானமும் வராது என்றால் சரி தான்.

பி அட்டவனை சொத்தை என் தந்தை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் சுகுமாறன் என்பவருக்கு 22.8.1994அன்று வா.சா.ஆ.2 முன்னிலைக்கு கிரயம் கொடுத்தார். தாவா எ அட்டவனை சொத்தில் என் தந்தை எந்த அயிட்ட சொத்தை முதன் முதலில் கிரயம் பெற்றார் என்றால் 1995ல் பசுபதி, முனியம்மாள் மற்றும் 23 நபர்களிடம் கிரயம் பெற்றார். முனியம்மாளிடம் கிரயம் பெற்ற கிரயப்பத்திரம் (வா.சா.ஆ.17) என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரி தான்.

மேற்படி கிரயமான 7.8.1994ல் கிரயமானது என்றால் சரி தான். மேற்படி சொத்து எந்த ஊரை சேர்ந்தது என்றால் சென்னாவரத்தை சேர்ந்தது. வா.சா.ஆ.17 பின்னிட்டு தான் என் அப்பா பி அட்டவனை சொத்தை கிரயம் கொடுக்கிறார் என்றால் சரி தான். சுகுமாறனுக்கு எவ்வளவு தொகைக்கு விற்பனைக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் குறித்து என்னுடைய பிராதிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லையென்றால் சரி தான்.

முனியம்மாளிடமிருந்து வா.சா.ஆ.17 முன்னிலைக்கு என்னுடைய தந்தை எவ்வளவு தொகைக்கு கிரயம் வாங்கினார் என்ற விவரம் குறித்து என்னுடைய பிராதிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லையென்றால் சரி தான்.

நான் என்னுடைய பிராதில் பி அட்டவனை சொத்தை விற்பனை செய்த தொகையில் தான் எ அட்டவனை சொத்து வாங்கியதாக சொல்வது தவறு என்றாலும், பி அட்டவனை சொத்து எ அட்டவனை சொத்து வாங்கிய பிறகு தான் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் பி அட்டவனை சொத்திற்கான முன் தொகையை பெற்று எ அட்டவனை சொத்து கிரயம் பெறப்பட்டது. பி அட்டவனை சொத்திற்கான முன் தொகையை பெற்று தான் எ அட்டவனை சொத்து கியரம் பெறப்பட்டது என்பதற்கு என்னுடைய பிராதிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லையென்றால் சரி தான்.

வா.சா.ஆ.2ல் சுகுமாறனுக்கு கிரயம் கொடுக்கப்பட்ட அன்றைய தினம் கிரய தொகை பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் முன் தொகை பெறப்பட்ட பிறகு தான் தாவா எ அட்டவனை சொத்து கிரயம் பெறப்பட்டது. எவ்வளவு முன் தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான்.

உண்மையில் முன் தொகை சுகுமாறன் என்பவர் பி அட்டவனை சொத்தை விற்பனை செய்வதற்காக என் அப்பாவிற்கு கொடுத்திருந்தால் எவ்வளவு தொகை, யார் முன்னிலையில் என்றைய தினம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை என்னுடைய தாவாவிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லியிருப்பேன் என்றால் அப்போது எனக்கு 5 வயது தான் இருக்கும். இது குறித்து எல்லாம் வீட்டில் பேசிக்கொண்டதை வைத்து தான் தற்போது

சொல்கிறேன். மற்ற விவரங்கள் ஏதும் எனக்கு தெரியாது. சுகுமாறனுக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை.

வா.சா.ஆ.18ஆனது என் தந்தை பசுபதியிடம் கிரயம் பெற்ற சொத்தின் ஆவணம் என்றால் சரி தான். வா.சா.ஆ.17 மற்றும் 18ல் கண்டுள்ள சொத்துக்களை என் அப்பா மனைபிரிவுகள் போட்டு விற்பனை செய்துள்ளார் என்றால் மனை பிரிவுகள் கொஞ்சம் உள்ளது. மேற்படி சொத்துக்கள் சென்னாவரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.17 மற்றும் 18ல் கண்டுள்ள சொத்துக்களை எத்தனை மனைகள் போடப்பட்டது, யார் யாருக்கு, எப்போது, எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற விவரத்தை என்னுடைய தாவாவிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரி தான்.

பிரிக்கப்பட்ட மனை பிரிவுகளில் விற்பனைக்கு பிறகு மீதம் உள்ள மனை பிரிவுகளை குறித்த விவரம் என்னுடைய பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான். மேற்படி மனை பிரிவுகளை என்னுடைய வழக்கில் சேர்க்கவில்லையென்றாலும் சரி தான். வா.சா.ஆ.17 மற்றும் 18 முன்னிலைக்கு கிரயம் பெற்ற சொத்துக்கள் என்னுடைய தந்தையின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் மனை பிரிவுகள் குறித்த விவரமும் மீதம் உள்ள மனையின் விவரங்களும் என்னால் சொல்ல முடியவில்லை மற்றும் வழக்கில் சேர்க்க முடியவில்லை என்றால் தனிப்பட்ட சொத்து என்பது பொய். மனை பிரிவுகள் மற்றும் விற்பனை குறித்த விவரங்கள் எனக்கு தெரிந்த வகையில் வழக்கில் கொடுத்துள்ளேன்.

என்னுடைய கணவர் பெயர் தினகரன். அம்மா வழி உறவினர். என்

அம்மாவின் அம்மா வழி பாட்டி வந்தவாசியில் தேரடி வீதியில் ஹோட்டல் நடத்தினார் என்றால் சரி தான். அம்மா வழி பாட்டி வீடு வசதியான குடும்பம் என்றால் நடுத்தர குடும்பம். தாய்மாமா பெயர் கிருஷ்ணமூர்த்தி. கிருஷ்ணமூர்த்தியின் மனைவி பெயர் தேவகி.

என் தந்தை பி அட்டவனை சொத்தை விற்பதற்கு முன்பு வந்தவாசி பஜார் தெருவில் உள்ள கடைகளை பொது அதிகாரம் முன்னிலைக்கு பார்த்தசாரதி முதலியார் வகையறாவிடமிருந்து பெற்றார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கடைகளை பி அட்டவனை சொத்தை விற்பதற்கு முன்பு பல நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional District Judge,
Fast Track Court, Arani.